குரோட்டன்

1. **மாவுப்பூச்சி, பிளானோகாக்கஸ் லைலாசினஸ்**

**சேதத்தின் அறிகுறி:**

- இதன் தாக்கம் இலையின் அடிப்பகுதியிலும், இளம் குருத்துக்களின் கணுக்களிலும் காணப்படும்
- தாக்கப்பட்ட தாவரங்களில் இலைகள் உதிர்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- உடம்பில் உள்ள வெதிலில் வெள்ளை மாவுப் போன்ற படிவம் காணப்படும்
- சிறியதாகவும், மென்மையாகவும் காணப்படும்
- பெண்பூச்சி இறக்கையற்றதாகும், உடம்பு வெள்ளை நூலால் மூடப்பட்டிருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தேவையான நிழலை பேணுதல் வேண்டும்
- எறும்புகளில் கூடுகளை அழித்துவிட வேண்டும்
- குயினால்பாஸ் 1.5 சதவிதம் (அ) மிதைல் பாரத்தியான் 2 சதவிதம் (அ) மாலத்தியான் 5 சதவிதம் தெளிக்கவும்
- குயினால்பாஸ் 2மி.லி (அ) பென்தியான் 1மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும்
- கிரிப்டோலேமஸ் மான்டுசேரி பொறிவண்டை பாதுகாக்க வேண்டும்

- லெப்டோமேஸ்டிக்ஸ் டேக்டைலோபி ஒட்டுண்ணியை விடலாம்

2. **பழுப்பு செதில் பூச்சி: ஸெஸ்செட்புயா காபியா:**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளுக்கு அடியில் இருந்து உண்ணும்
- தாக்கப்பட்ட தாவரங்கள் அதன் கம்பீரத்தை இழந்து காணப்படும் மற்றும் இலைகள் காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

**குஞ்சுகள்:** மஞ்சள் மற்றும் பழுப்பு நிறத்திலும், தட்டையாகவும் காணப்படும்

- ◌H◌ வடிவ மஞ்சள் குறியீடுகள் தோன்றும்
- பெண்பூச்சி பாதி உருளையாகவும், உடம்பை வெளுப்பு நிற கடின கவசம் மூடியிருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- எறும்புகளை கட்டுப்படுத்தவும்
- செதில் பூச்சிகளுக்கு இடமளிக்கும் களைகளை அகற்றி அழித்துவிடவும்
- குயினால்பாஸ் 2மி.லி (அ) பென்தியான் 1மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்

3. **குரோட்டன் புழு, அக்கோய ஜனாதா:**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் தளைகளை உண்ணும்
- இலைக்காம்புகளையும், இலை நரம்புகளையும் விட்டுவைத்து மீதி இலைகளை உண்ணும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- கையால் புழுக்களை பொறுக்கி அழிக்கவும்
- உயர்ந்த பகுதிகளில் வளர்க்கலாம்
- நாற்றங்காலில் தாவர இடைவெயியை கூட்டலாம்
- மாலத்தியான் (அ) குயினால்பாஸ் 2மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்